# மே தினத்தில் ஓரணியில் திரள உறுதியேற்போம்!




அமெரிக்காவில் செயிண்ட் பீட்டர் சதுக்கத்தில் 1784 அன்று உழைக்கின்ற தொழிலாளர் அனைவரும் ஒன்று திரண்டு 8 மணி நேர வேலை. 8 மணி நேர உறக்கம், 8 மணி நேரம் குடும்பத்துடன் உற்சாகமாயிருத்தல் எனும் உன்னத கோரிக்கையை வைத்து மாபெரும் போராட்டம் நடத்தினர். ஆளும் வர்க்கம் போராட்டத்தை ஒடுக்கிட துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட அடக்குமுறைகளை கையாண்டது. அதன் விளைவாக பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் மற்றும் தங்களுடைய அங்கங்களையும் இழந்தனர். போர்க்களம் போல் இரத்தம் ஆறாக ஓடியது. ஓடிய இரத்தத்தில் தங்களது உடைகளை நனைத்து செங்கொடியாக அந்த தொழிலாளர்கள் உயர்த்திப் பிடித்தார்கள்.

இதனுடைய தொடர்ச்சியாக உலக நாடுகளிலுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் ஒருங்கிணைந்து கூடி பேசி 1886 முதல் மே முதல் நாளை தொழிலாளர் தினமாக கொண்டாடுவதென முடிவு செய்தனர். அதன்படி வரும் மே 1 ஆம் தேதி 139வது மே தினமாக நாம் கொண்டாட உள்ளோம்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவில் உள்ள மே தின நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் அஞ்சலி செலுத்தவுள்ளார்கள். அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தொ.மு.ச. பேரவை நிர்வாகி கள் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி மே தின வாழ்த்துக்களை தெரிவிக்க உள்ளனர்.

கழகம் தோன்றிய நாள் முதல் பொதுவுடைமைக் கருத்துக்களையும், திராவிட இயக்க கோட்பாடுகளையும் ஒன்றிணைத்து, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், தற்போதுள்ள கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பொதுவுடைமை திராவிடர் இயக்க குறிக்கோளி லிருந்து சற்றும் விலகாமல், தொழிலாளர்களை பாதுகாத்து, அவர்களது கோரிக்கைகளை எவ்வித சமரசமுமின்றி நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி வருவதை நாம் நன்கு அறிவோம்.



**மு.சண்முகம் எம்.பி.,**
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபின் தொழிலாளர்களுக்கென தனித்துறை ஒன்றை உருவாக்கி. அதற்கென ஒரு அமைச்சரையும் நியமித்தார். தொழிலாளர்களின் தினமான மே தினத்தை ஊதியத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்து, தேசிய மற்றும் பண்டிகை விடுப்பு சட்டத்தை திருத்தம் செய்து, மே 1ம் தேதிக்கு தேசிய விடுமுறை அளித்த பெருமை இந்தியாவிலேயே முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களையேச் சாரும். சென்னையில் உள்ள சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்கா என்ற பெயரை, “மே தினப் பூங்கா” என பெயர் மாற்றினார். அந்தப் பூங்காவில் மே தின நினைவுச் சின்னத்தை நிறுவி, ஆண்டு தோறும் மே நாளன்று மலர் வளையம் வைத்து, மே நாள் தியாகிகளுக்கு, கழகத் தலைவரும் மாண்புமிகு முதல்வரும் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், தொ.மு.ச. பேரவை நிர்வாகி களும் மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கு 4 சதவிகித குறைந்தபட்ச போனசை மாற்றி 8.33 சதவிகிதம் என்று கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்டவர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள்.

தனியாரிடம் சிக்கித் தவித்த போக்குவரத்து தொழிலாளர்களை மீட்டு தனியார் போக்குவரத்தை அரசுடைமையாக்கி இன்று ஆல் போல் வளர்ந்து, 22,000 பேருந்துகள், ஒன்றரை லட்சம் தொழிலாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுமார் ஒரு கோடி கிலோ மீட்டர் பயணித்து. ஒன்றரை கோடி பயணிகளை சுமந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

நமது கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மகளிர் விடியல் பயணம் துவங்கி நாளொன்றுக்கு சுமார் 59,18,000 பேரும், ஒட்டுமொத்தமாக (12.07.2021 முதல் 19.04.2025 வரை) 673 கோடியே நாற்பத்து மூன்று இலட்சம் பயண நடைகள் இலவச பயணம் செய்துள்ளனர். அரசு புதிய பேருந்துகளை வாங்கி மக்களுக்கு சிறப்பாக சேவை செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் விளைவித்த பொருட்களை கட்டுப்படியான விலைக்கு விற்க முடியாமல் தவித்து வந்த நிலையில், விவசாயத்தில் ஆர்வம் குறைந்து, விவசாயம் செய்வதையே கைவிட்டனர். இதனைத் தவிர்த்திட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற நிறுவனத்தை உருவாக்கினார். இதன் மூலம் விவசாயிகளுடைய அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்து நவீன அரிசி ஆலைகளில் அரிசியாக்கி, குறைந்த விலையில் தி.மு.க. ஆட்சியில், மக்களுக்கு நியாய விலைகடைகள் மூலம் கிடைக்கச் செய்தார். இதனால் விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரும் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவி லேயே மிகச் சிறப்பான உணவுப் பங்கீட்டு முறை செயல்படுவது கண்டு அனைவரும் வியந்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணியாற்றிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை தி.மு.கழக ஆட்சியின் போதுதான், அவர்களை பணி நிரந்தரப்படுத்தி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியது கழக அரசுதான்.

ஏழை விவசாயிகள் மின் இணைப்புக்கான கட்டணத்தை செலுத்த முடியாமல் அதனை குறைக்க வேண்டி கோரிக்கை வைத்த போது. விவசாயிகளின் பம்ப்செட்டு, மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியது கழக ஆட்சியில்தான் என்றால் அது மிகை யாகாது. கழகத் தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றதிலிருந்து சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி உள்ளார். ஏழைகளின் வீடுகளுக்கு ஒரு மின்விளக்கு என்ற இலவச மின் திட்டத்தையும் அறிவித்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்.

கோயம்பேடு பேருந்து நிலையம் வேண்டுமென கேட்டு மக்கள் எந்த கோரிக்கையும் வைத்து கொடி பிடித்ததில்லை. ஆனால் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அதே போல் தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின். கிளாம்பாக்கத்தில் மிகப்பெரிய கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தை நிறுவி, பயணிகள் கூட்ட நெரிசலின்றி சென்று வர வழி வகை செய்தார். இந்தியாவிலேயே சென்னை சுற்று வட்டாரத்தில் அனைத்து பகுதிகளையும், இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் சேவை கொண்டு வரப்பட்டு சென்னை மக்களின் பாராட்டினை பெற்றுள்ளார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையில் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம் கண்டார். குமரியில் வள்ளுவருக்கு சிலை அமைத்தார். கழகத் தலைவர் தளபதி அவர்கள் குமரியிலுள்ள வள்ளுவர் சிலைக்கு சென்று வர, கண்ணாடி இழை பாலம் அமைத்து, சுற்றுலா பயணிகள் வியக்கும் வண்ணம் செய்துள்ளார். உலகில் கணினி அறிமுகமாகும் போது முன்னாள் முதல்வர் முத்தமிழறி ஞர் கலைஞர், தகவல் தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கி, சென்னையில் “டைடல் பார்க்” கொண்டு வந்தார். தளபதி அவர்கள் மாவட்டந்தோறும் டைடல் பூங்காவை நிறுவி வேலை வாய்ப்பினை உருவாக்கினார்.

பள்ளிக்குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், மாணவர்கள் கல்வி கற்று தன் திறனை வெளிப்படுத்த பல்வேறு திட்டங்கள், மூலை முடுக்கிலுள்ள கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி பெற அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார். தமிழக மாணவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று, விஞ்ஞானி களாக முதன்மை அதிகாரிகளாக பணியாற்றி தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வருவது கழக ஆட்சியால்தான்.

கார்ப்பரேட்டுகளின் அடிவருடிகளான பா.ஜ.க. மோடி அரசு தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் நான்கு சட்டத் தொகுப்புகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. அதை தமிழகம், கேரளம், மேற்குவங்கம் போன்ற பெரும்பாலான மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அதை நிறைவேற்ற விதிகளை உருவாக்கிடாமல் நிலுவையில் வைத்துள்ளனர் என்பதை தொழிலாளர் தோழர்கள் உணர வேண்டும்.

இவைகளையெல்லாம் நிறைவேற்றுவதை தடுக்க நாம் ஆங்காங்கே கூட்டங்கள் நடத்தி, தொழிலாளர்களைத் தயார்படுத்தி வருகிறோம். மே 20ம் தேதி அன்று மாபெரும் வேலை நிறுத்த போராட்டத்தை அகில இந்திய அளவில் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்துவதென முடிவு செய்துள்ளோம்.

தொழிலாளர்கள் போராடி பெற்ற உரிமைகளை பாதுகாக்கவும், பெற வேண்டிய சலுகைகள். மறுக்கப்படுவதை பெற்றுத் தரவும். தொ.மு.ச. பேரவை வாதாடி, போராடி பெற்றுத் தரும் என்கிற நம்பிக்கையோடு, பேரவையில் இணைந்து உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் மே தின வாழ்த்துக்கள்! உழைப்பவர்கள் போற்றும் உன்னதமான இந்நாளில் நம்முடைய தாய்க்கழகமாம் தி.மு.கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் முதல்வருமான தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி தொடர நாம் அனைவரும் ஓரணியில் அணி திரள்வோம் என மே தின நாளில் உறுதியேற்போம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குநர் மு.பா. அன்புச்சோழன் 30.4.2025 அன்று பணி ஓய்வு பெறுவதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்** வருகிற (03-05-2025 சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** : கழக ஆக்கப் பணிகள்



**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 600 018

## சென்னையில் இன்று நடைபெறுகிறது! வேலூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்

# தி.அ.முகமது சகி இல்லத் திருமண விழா!

### அமைச்சர் துரைமுருகன் – துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் வாழ்த்து! கழக முன்னணியினர் பங்கேற்பு!

வேலூர், மே. 1–

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வேலூர் மாவட்டக் கழக அவைத் தலைவர் தி.அ.முகமது சகி அவர்களின் இளைய சகோதரர், வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயர் தி.அ.முகமது சாதிக் பாஷா அவர்களின் புதல்வர் டாக்டர் தி.ச.முகமது சித்தீக் அனீப் சென்னை அயனாவரம் பேராசிரியர் டாக்டர் ஏ.சர்புதீன் புதல்வி ஏ.எஸ். ஆயிஷா பாத்திமா ஆகியோரின் திருமண விழா இன்று (1.05.2025 – வியாழக்கிழமை) எண். 5, சென்னை வேப்பேரி நெடுஞ்சாலை, பெரிய மேடு பள்ளிவாசல் அருகில் ஏ.ஆர்.டவர் ஜவகர் எலைட் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள், துணை முதல்வர், மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இவ்விழாவில் அமைச்சர்கள் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு மற்றும் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், மா.சுப்பிரமணியன், எஸ்.ரகுபதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தயாநிதிமாறன் எம்.பி., திருச்சி சிவா எம்.பி., கே.எம்.காதர் மொய்தீன், ஏ.அப்துல் ரகுமான், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., க.தேவராஜ் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்எல்.ஏ., வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., ஏ.கே.சுந்தரமூர்த்தி, சென்னை மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் எம்.மகேஷ்குமார், வேலூர் மேயர் சுஜாதா ஆனந்தகுமார், சுனில் குமார், மு.பாபு பி.டீக்காராமன், சி.கே.தேவேந்திரன், ஏ.நாராயணன், நீல.சந்திரகுமார், வி.இ.சிவகுமார் ஜி. கோபாலகிருஷ்ணன், ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ., வி.அமுலு விஜயன் எம்.எல்.ஏ., ஏ.சி.வில்வநாதன் எம்.எல்.ஏ., சி.நரசிம்மன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், வேலூர் மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக டாக்டர் தி.ச.முகமது சயி, வழக்கறிஞர் தி.மு.முகமது மசூத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

**திருமண வரவேற்பு நிகழ்ச்சி!**

திருமண வரவேற்பு நிகழ்ச்சி 4.05.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணிக்கு வேலூர் ரங்காபுரம் ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் நடைபெறுகிறது.

## மு.சண்முகம் எம்.பி. – ஆ.இராசா எம்.பி. இன்று சிறப்புரை!

# தொ.மு.ச. பேரவை சார்பில் முதல்வர் பிறந்த நாள் - மே தின விழா!

### கி.நடராசன் தலைமையில்!

*சென்னை, மே. 1 -*

*தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மே தின விழா இன்று (1.5.2025) மாலை 3 மணிக்கு கலைவாணர் அரங்கம் வாலாஜா சாலை சென்னையில் நடைபெறுகிறது.*

*அமைப்புச் செயலாளர் வே.வேலுசுவாமி வரவேற்கிறார். தொ.மு.ச. பேரவை தலைவர், கி.நடராசன் தலைமை தாங்குகிறார்.*

*தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர், மு.சண்முகம் எம்.பி. கழக துணைப் பொதுச்செயலாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.ராசா எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*தொ.மு.ச. பேரவை பொருளாளர், கோ.சி.வள்ளுவன் நன்றி கூறுகிறார்.*

*இந்த மாபெரும் நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவை மாநில நிர்வாகிகள், கழக முன்னணியினர், உரையாற்றுகின்றனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாடு: தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை கலைஞரகம்.*

*இந்த மே தினவிழா மற்றும் முதல்வர் பிறந்த நாள் விழாவில் தொ.மு.ச. மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தொ-மு.ச. உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.*



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி சார்பில் 6 வட்டச் செயலாளர்கள் ஏற்பாட்டில் இராயபுரம் மேற்கு பகுதி 6 வட்டங்களில் கோடைக்கால நீர்மோர் பந்தல், தண்ணீர் பந்தலை சென்னை வடக்கு மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தர்பூசணி, மோர், பழ வகைகள் ஆகியவை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில் குமார், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



கோடை வெயிலின் தாக்கத்தை போக்கிடும் வகையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், திருப்பதி பேருந்து நிலைய அருகில், காமராஜர் சிலை அருகில் , சென்னை சில்க் அருகில் பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, பழரசம், குளிர்பானம் ஆகியவற்றை சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் வழங்கினார். நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், ஆர்.டி.இ. ஆதிசேஷன், க.திராவிடபக்தன், சி.ஜெயபாரதி, எஸ்.மகாலிங்கம், கூளூர் எம். ராஜேந்திரன், கே. அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், ப. சிட்டிபாபு, வி.எஸ். நேதாஜி, பி. கே. நாகராஜ், தா. மோதிலால், பூண்டி எம்.எஸ். அருண்குமார் , பொன். பாண்டியன், வி. ராஜசேகர், ஆ.கமலக்கண்ணன், பட்டரை கே.பாஸ்கரன், கொப்பூர் டி.திலீப் குமார், கே செங்குட்டுவன், ஆர்.மோகனசுந்தரம், லோட்டஸ் கோபி, தமிழ்ச்செல்வன், பி.கருணாகரன், பெருமாள் ஆர் சேகர், வா. சங்கர் , என். சுரேஷ்குமார், எஸ். முனுசாமி, சா.பிரபு, ராஜேஷ், ஜி. ரமேஷ், ஜானகிராமன், ப. முரளி, உலகநாதன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமை! எஸ்.அப்பு ஏற்பாட்டில்

# திருவொற்றியூரில் முதல்வர் பிறந்த நாள் விழா!

### நலத்திட்ட உதவிகள் - ஆணழகன் போட்டி நடைபெற்றது!

*சென்னை, மே.1-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் ராஜா கடை சாத்தாங்காடு ஐ ரோடு சென்ட்பால்ஸ் பள்ளியில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி டாக்டர் எஸ்.அப்பு என்கின்ற சிவராமன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் சட்டமற்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் ஆணழகன் போட்டி நடைபெற்றது. இதில் 5 முதல் 60 வயது வரையிலானோர் 350 மேற்பட்டோர் ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*இதில் ஆந்திரா, கேரளா, பெங்களூரு, பாண்டிச்சேரி, சென்னை, கடலூர், திருவள்ளூர், சேலம், வேலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.*

*இப்போட்டியில் திருவண்ணாமலையைச் சேர்ந்த 60 வயது முதியவர் வெற்றிவாகை சூடினார். அனைவருக்கும் கோப்பைகள் மெடல்கள் கொடுக்கப்பட்டன.*

*இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.*

*20 பேருக்கு எல்.இ.டி. டிவி, 4 பேருக்கு மிக்ஸி, 4 பேருக்கு இண்டக்ஷன் ஸ்டவ், 2 பேருக்கு பேன் வழக்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*



கழக இளைஞரணி செயலாளர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி சென்னை வடகிழக்கு மாவட்டம் செயலாளர் மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆணைக்கிணங்க சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே கருணாகரன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் ஆகியோரின் ஆலோசனைப்படி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜெகன் ஏற்பாட்டில் ஆங்காடு ஊராட்சியில் கிளையில் இளைஞர்களுக்கு இளைஞர் அணி அமைப்பாளர்– துணை அமைப்பாளர் சுயவிவர படிவம் வழங்கப்பட்டது. உடன் கிளை கழக நிர்வாகிகள் இளைஞர் அணி தம்பிமார்கள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.